# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

**முதலாந் தவணைப் பரீட்சை - 2023**

| தரம் - 10 | வரலாறு | நேரம் :- 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ........................................................................................

## பகுதி I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

❖ ***1 – தொடக்கம் 30 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்டுள்ளது. விடைகளில் மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.***

01. இலங்கையின் மிகப் பழைமையான நூலாகவும் கி.பி 4ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இலக்கியம்.
    1) மகாவம்சம் 2) போதிவம்சம் 3) தீபவம்சம் 4) சூளவம்சம்

02. மகாவம்சத்தை எழுதிய மகாநாமதேரர் வசித்த பிரிவெனா.
    1) சுன்ஹத் பிரிவெனா 2) திக்சந்த செனவியா பிரிவெனா
    3) மருகத பிரிவெனா 4) எலக்க பிரிவெனா

03. கோட்டைக்காலம் முதல் கண்டி இராசதானிவரையான வரலாற்றை அறிய உதவும் புகழ்காவியம் பின்வருவனவற்றுள் எது?
    1) பெரகும்பா சிரித்த 2) மயூரசந்தேசய
    3) சீதாவாக்க சட்டன 4) பூஜாவலிய

04. இலங்கையின் புத்தசாசன வளர்ச்சி பற்றிக் கூறும் நிகாய சங்கிரகய, அரசியல் தகவல்கள் அடங்கிய ராஜாவலிய என்பன எழுந்த காலப்பகுதி.
    1) கம்பளை, கோட்டை 2) கோட்டை, கண்டி
    3) அநுராதபுரம், பொலன்னறுவை 4) பொலன்நறுவை, கோட்டை

05. இலங்கை பற்றிய குறிப்பபுக்களை எழுதிய வெளிநாட்டவர்களுள் கிரேக்க நாட்டைச் சேர்ந்தவர்கள் மட்டும் இடம் பெறும் விடை யாது?
    1) அரிஸ்டோட்டில், தொலமி, மெகஸ்தனிஸ்
    2) அரிஸ்போட்டில், மெகஸ்தனிஸ், ஓசினி கிறீட்டஸ்
    3) அரிஸ்டோட்டில், றொபேட்நொக்ஸ், ரிபைரோ
    4) மெகஸ்தனிஸ், பிலிப் பல்டியஸ் ஓசினி கிறீட்டஸ்

06. அனுராதபுரக் காலம் முதல் கோட்டை இராசதானி ஆரம்பம் வரையிலான காலப்பகுதியில் எழுதப்பட்ட இலக்கியங்களில் அவை எழுதப்பட்டமைக்கான நோக்கம்.
    1) அரசியல் மையப்படுத்தல் 2) ஆக்கிரமிப்புக்கொள்கை
    3) வர்த்தகம் 4) சமயம்

07. இலங்கை பற்றிய தகவலைக் குறிப்பிடும் தென்னிந்திய இலக்கியம் அல்லாதது.
    1) சிலப்பதிகாரம் 2) மணிமேகலை
    3) இராஜதரங்கினி 4) பத்துப்பாட்டு

08. கி.பி 7ம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட குதிரைத்தலையும் மனிதனும் எனும் செதுக்கல் அமைந்தள்ள இடம்.

1) அபயகிரிவிகாரை
2) இசுறுமுனிய விகாரை
3) றுவன்.வெலிசாய
4) மகாவிகாரை

09. இலங்கையில் பொலன்னறுவைக் காலத்தில் பயன்படுத்தப்பட்ட தம்பமஸ்ஸ என்ற நாணயம் எந்த உலோகத்தினால் செய்யப்பட்டது.

1) தங்கம்
2) செப்பு
3) இரும்பு
4) வெள்ளி

10. கற்கால மனிதன் இலங்கையில் ஆறு சுற்றாடல் வலயங்களில் வாழ்ந்துள்ளான் இக் காலநிலை வலயங்களைத் தீர்மானித்த காரணி எது?

1) மண்ணின் தன்மை
2) வெப்பநிலை
3) வருடாந்த மழை வீழ்ச்சி
4) தரைத்தோற்ற வேறுபாடு

11. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த மலையகப் பிரதேச வெட்டைவெளி வேட்டை வாழிடமாக கருதப்படுவது.

1) பத்திராஜவெல
2) சீகிரிய பொத்தான
3) பண்டாரவளை
4) பெல்லன் பதி பெல்லஸ்ஸ

12. 12500 வருடங்களுக்கு முன்னர் காட்டுப் பலாவின் விதைகளை தீயில் சுட்டு சாப்பிட்டமைக்கான ஆதாரம் கிடைத்த இடம் எது?

1) பாகியன்கல
2) உடரஞ்சாமடம்
3) ஹஸ்துமுல்ல
4) கித்துல்கல பெலிலென

13. நிரல் 1 இல் கற்கால மரணச்சடங்கு தொடர்பான ஆதாரங்கள் கிடைத்த இடங்களையும் நிரல் 2ல் மரணச் சடங்கு முறையும் தரப்பட்டுள்ளது. நிரல் 1 இன் ஒழுங்கு முறைக்கு அமைய நிரல் 2 இனை ஒழுங்குபடுத்தப்படுத்தும் போது வரும் சரியான விடை.

| நிரல் 1 | நிரல் |
|---|---|
| 1) பாகியன் கல | A. வளைத்து புதைக்கப்பட்ட எலும்புக்கூடு |
| 2) இராவண எல்ல | B. இரண்டாகப் பிளக்கும் வகையில் துளையிடப்பட்ட மண்டையோடு |
| 3) குருவிட்ட பட்டதெம்பலென | C. செந்நிறக்கற்களை உராய்ந்து பூசப்பட்ட எலும்புக்கூட்டின் பகுதிகள் |

1) ABC
2) CBA
3) BCA
4) ACB

14. மக்களால் கைவிடப்பட்ட குளங்களை அண்டிய கிராமம் எப்பெயரால் அழைக்கப்பட்டது.

1) ஒலகம்
2) வாபிகம
3) பட்டனகம
4) நியம்கம்

15. ஹஸ்துமுல்ல, பெரகல ஆகிய முன்வரலாற்றுக் காலத்துக்குரிய மயாணங்கள் காணப்படும் மாகாணம் பின்வருவனவற்றுள் எது?

1) சப்பிரகமுவா
2) மத்தியமாகாணம்
3) தென் மாகாணம்
4) ஊவாமாகாணம்

16. தாவர உணவுகளை உட்கொள்வதில் ஆர்வம் காட்டி உலோகப் பயன்பாட்டுடன் நிரந்தரக் குடியேற்றங்களை நிறுவிய காலம் எது?

1) வரலாற்றுக்கு முற்பட்டகாலம் 2) வரலாற்றுக்காலம்

3) ஆரம்ப வரலாற்றுக்காலம் 4) முன்வரலாற்றுக்காலம்

17. இலக்கிய மூலாதாரங்களில் வேலியிட்டு பாதுகாக்கப்பட்ட கிராமங்கள் எப்பெயரால் அழைக்கப்பட்டது.

1) பரிகித்தகம 2) சுமணவாபிகம 3) அபரிகித்தகம 4) விஹாரவாவிகம

18. கி.மு 250 ஆம் ஆண்டுக்குரிய கல்வெட்டில் குகை ஒன்றை பிக்குகளுக்கு தானமளித்த பருமக “தொட்டபோஜக” என்ற சொல்லால் குறிப்பிடப்பட்டுள்ளார் அதன் பொருள்.

1) நீதிப்பரிபாலகர் 2) நகரபரிபாலகர்

3) கப்பல்துறையை நிர்வகிப்பவர் 4) படகுத்துறையை நிர்வகிப்பவர்

19. கிராமத்து இல்லத்தலைவர்களிலிருந்து தெரிவு செய்யப்படுபவரே கமிக எனக் கூறும் நூல்.

1) சமந்தபாசதிகா 2) சத்தர் மரத்னாவலிய 3) மகாவம்சம் 4) வம்சத்த பகாசினி

20. வசபமன்னன் காலத்தில் யாழ்ப்பாணத்தை ரிஷிகிரி என்பவர் நிர்வகித்ததாக குறிப்பிடும் ஆதாரம் யாது?

1) வல்லிபுரபொற்சாசனம் 2) பனாகடுவ செப்பேடு

3) கல்பொத்த கல்வெட்டு 4) சொரபொரவாவி கல்வெட்டு

21. குளத் தொகுதியை குறிப்பிட உலர்வலய மக்கள் பயன்படுத்திய சொல்.

1) அவரண 2) ரஜமொகால் 3) எல்லங்காவ 4) வெப்பிரபாதனய

22. பிரதேச நிர்வாகத்தின் பொருட்டு செயற்பட்ட பெண்கள் எப்பெயரால் அழைக்கப்பட்டனர்.

1) கஹபதி 2) அரசி 3) மதுபாச்சிகா 4) பருமகலு

23. கேகாலையில் யடஹெலென எனும் புராதன விகாரைக் கற் குகையில் “துகத ரஜ“எனக் குறிப்பிடப்படுபவர்.

1) கிராமத்தலைவன் 2) பிரதேச நிர்வாகி 3) அரசன் 4) குடும்பத்தலைவன்

24. தனது பத்தாவது ஆட்சி வருடத்தில் கிராமங்களுக்கு எல்லையை வகுத்த அனுராதபுர கால மன்னன் யார்?

1) தேவநம்பியதிஸ்ஸ 2) வலகம்பா 3) துட்டகைமுனு 4) பண்டுகாபயன்

25. ஏழைக் குடியானவன் ஒருவன் அடுத்த போகத்தில் தருவதாக கூறி கமிகவிடம் நெல் மூட்டை ஒன்றைப் பெற்றுக்கொண்டார் எனும் தகவல் இடம் பெறும் நூல் எது?

1) மகாவம்சம் 2) இராஜாவலிய 3) ஜாதக அட்டகதா 4) சுந்தர் மரத்னாவலி

26. பின்வரும் வரலாற்று நிகழ்வுகளை கால ஒழுங்கில் ஒழுங்குமுறைப்படுத்தினால் பெறப்படும் சரியான விடையை தெரிவு செய்க.

A – பாரிய குளங்களை அமைக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது

B – அபயவாவி அமைக்கப்பட்டமை

C – மகிந்ததேரரின் இலங்கை வருகை

D – எல்லாளனை தோற்கடித்து அனுராதபுரத்தை கைப்பற்றியமை

1) BCDA 2) ABDC 3) DCAB 4) CBDA

27. பருமகமார்களுக்கு உயர்பதவிகளை வழங்கி அரசியல் அதிகாரத்தை மையப்படுத்தும் செயன்முறையை தொடங்கிய அரசன்.

1) துட்டகைமுனு 2) வசபன் 3) பண்டுகாபயன் 4) தாதுசேனன்

28. இலங்கையில் அரசியல் பலம் மத்தியப்படுத்தப்பட்ட பின்னர் நகரபரிபாலகர் பணிக்கை நியமிக்கப்படவரின் பதவிப்பெயர் யாது?

1) நகரவடிக 2) கெதுறுகோனா 3) நடஅதெக 4) நகரகுத்திக

29. சிறுவயதில் கீர்த்தி குமாரன் என அழைக்கப்பட்ட பொலன்னறுவை மன்னன்.

1) 1ம் விஜயபாகு 2) 1ம் பராக்கிரமபாகு

3) 1ம் காசியப்பன் 4) திஸ்ஸங்கமன்னன்

30. A திஸ்ஸ மகாராம குளத்தை அமைத்தமை

B – புனித வெள்ளரசு மரக்கிளை நாட்டும் வைபவத்துக்கு கதிர்காமம், சந்தணகாமம் போன்ற இடங்களின் பிரதேசத்தை தலைவர்களை அழைத்தமை.

1) A யும் B யும் சரியானது 2) A சரியானது B பிழையானது

3) A பிழையானது B சரியானது 4) A மட்டும் சரியானது

(30 x 1 = 30 புள்ளிகள்)

## பகுதி – II

- முதலாம் வினா கட்டாயமானது.
- முதலாம் வினா உட்பட எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

(01) கீழே (i) இல் குறிக்கப்பட்டுள் எல்லா வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள இலங்கை புறவுருவப்படத்திலும், (ii) இல் குறிக்கப்பட்டுள்ள எல்லா இடங்களையும் உலகப் படத்திலும் குறித்து பெயரிடுக.

அ) (i) மல்வத்து ஓயா, கல்ஓயா, மாணிக்ககங்கை, அனுராதபுரம், உடரஞ்சாமடம், சீகிரிய, கோகர்ண, வல்லிபுரம், சிலாபம், இபன்கட்டுவ.

(ii) சீனா, உரோமம், போர்த்துக்கல், சென்னை, செங்கடல், அரபுக்கடல்

ஆ) (i) பின்வரும் கூற்றுக்களுக்கு உரிய விடைகளை ABCD ஒழுங்கில் தருக.

A - இலங்கைப்படத்தை வரைந்த முதல் கிரேக்க இனத்தவர்.

B - தொல்பொருள் அகழ்வினால் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பழைய நாணயம் எது?

C – பனாகடுவ செப்பு சாசனத்தில் அனுராத புரத்திற்கு வழங்கப்பட்ட பெயர்

D - இரத்தினக்கல் அகழ்வேர், பட்டை தீட்டுவோர் வாழ்ந்த கிராமம்

இ) (i) 1) காட்டப்பட்டுள்ள தன் பெயர்

2) இதனை காணக்கூடிய புனித தலம் எது?

3) இதில் காட்டப்பட்டுள்ள மனிதர் யார் என இனங்காட்டப்பட்டுள்ளார்?

4) இக் கலைப்படைப்பு இலங்கையின் எந்த இராச்சியத்துக்கு உரியது?



(ii) 1) காட்டப்பட்டுள்ள கல்வெட்டைக் குறிப்பிடும் பெயர் யாது?

2) இதனை ஆக்கிய மன்னனின் பெயர்.

3) இக்கல்வெட்டு நிறுவப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நகரம் எது?

4) இதன் சிறப்பு யாது?



(16 புள்ளிகள்)

(02) அ) புராதன காலத்தில் நாணயங்களை ஆக்குவதற்கு பயன்படுத்தப்பட்ட மூன்று வகை உலோகங்களைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ஆ) இலக்கிய மூலாதாரங்களை பயன்படுத்தும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கினை குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

இ) "இலங்கையின் வரலாற்றினை அறிந்து கொள்வதில் மகாவம்சம் சிறந்த ஓர் இலக்கிய மூலதாரமாகும்" இதற்கான ஆதாரங்கள் இரண்டினை குறிப்பிட்டு விளக்குக.

(5 புள்ளிகள்)

ஈ) வரலாற்றை கற்பதன் முக்கியத்துவங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

(6 புள்ளிகள்)

(03) அ) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதர்கள் உபகரணங்களைச் செய்வதற்குப் பயன்படுத்திய மூன்று வகையான கற்களை குறிப்பிடுக.

(3 புள்ளிகள்)

ஆ) A – வரலாற்றுக்கு முற்பட்ட மனிதர்கள் வாழ்ந்த தாழ்நிலஈரவலயக் குகைகள் இரண்டினையும்

B – அவர்களை வேட்டையாடிய விலங்குகள் இரண்டினையும் ஒழுங்குமுறையில் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

இ) முன்வரலாற்றுக் காலத்தில் மனிதன் பயன்படுத்திய தொழிநுட்ப அறிவு பற்றி இரண்டு விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(5 புள்ளிகள்)

ஈ) கற்கால மனிதனின் உணவுப் பழக்கவழக்கம், மரணச் சடங்கு என்பவை தொடர்பாக உதாரணங்களுடன் விளக்கு.

(6 புள்ளிகள்)

(04) அ) இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுதிக்குரிய மனிதன் வாழ்ந்த சூழலியல் வலயங்கள் மூன்றினைப் பெயரிடுக.

(3 புள்ளிகள்)

ஆ) ஆரம்ப வரலாற்றுக்கால குடியிருப்புப் பரம்பலில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் நான்கினை குறிப்பிடுக?

(4 புள்ளிகள்)

இ) a) முன்வரலாற்றுக் காலம் எனக் கருதப்படுவது எந்தக் காலப்பகுதியாகும்.

b) இலங்கையின் முன்வரலாற்றுக் காலத்துக்குரிய மயானங்களின் 3 வகைகளைக் குறிப்பிடுக.

(5 புள்ளிகள்)

ஈ) வரலாற்றுக்கால குடியிருப்புக்களின் இயல்பு, தன்மையினை பின்வரும் தலைப்புக்களினூடாக விளக்குக.

a) குளக் கிராமங்கள்

b) தொழில் அடிப்படையிலான கிராமங்கள்

c) செயற்பாட்டு ரீதியிலமைந்த கிராமங்கள்

(05) அ) கமிகவினால் ஆற்றப்படும் பணிகள் 3 குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ஆ) மன்னர்கள் மக்களுக்கு தோற்றம் தர விரும்பிய முறைகள் கீழே தரப்பட்டுள்ளன அவற்றுக்கு உதாரணமாக அமையும் மன்னர்களின் பெயர்களை ஒழுங்கு முறையே தருக.

a) நரேஸ்வரன்

b) மின்னேரியா தெய்வம்

c) அலகபய மகாராஜா

d) காலிங்க சக்கரவர்த்தி பெருமாள் (4 புள்ளிகள்)

இ) புராதன இலங்கையில் அச்சுரிமை கிட்டிய விதங்களைக் குறிப்பிட்டு உதாரணங்கள் மூலம் விளக்குக.

(5 புள்ளிகள்)

ஈ) பின்வரும் மன்னர்களின் அரசியல், பொருளாதாரப் பணிகளை விளக்குக.

a) வசபன்

b) 1ம் விஜயபாகு